செ.வெ. எண். 928 நாள் 04.12.09

# பத்திரிக்கைச் செய்தி

2009–10ம் கல்வி ஆண்டில் தொடக்கக் கல்வித் துறையின் கீழுள்ள ஊராட்சி ஒன்றிய/ நகராட்சி / அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுக்கு, மாநில வேலைவாய்ப்பு பதிவு மூப்பு அடிப்படையில் ஆசிரியர் தேர்வு வாரியத்திடமிருந்து 2039 இடைநிலை ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியல் இத்துறைக்கு பெறப்பட்டுள்ளது. இவர்களில் 760 ஆண்கள் மற்றும் 1279 பெண்களும் அடங்குவர்.

அனைத்து நாடுநர்களுக்கும் கீழ்க்கண்டவாறு பணியிட ஒதுக்கீடு கலந்தாய்வு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு, அவர்களின் இருப்பிட முகவரியை அடிப்படையாகக் கொண்டு அந்தந்த மாவட்டத்திலேயே அவர்களுக்கு கலந்தாய்வு நடத்தப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் கலந்தாய்வு நடைபெறும் பள்ளியின் பெயர் மற்றும் நாள் மற்றும் நேரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 15 மாவட்டங்களைத் தவிர பிற மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுநர்களில் உடல் ஊனமுற்றோர் (இருபாலர்) மற்றும் பெண் நாடுநர்களுக்கு **10.12.09** அன்றும், ஆண் நாடுநர்களுக்கு **11.12.2009** அன்றும் திருச்சி பிஷப்உறபெர் மேல்நிலைப் பள்ளியில் (தெப்பக்குளம் அருகில்) நடைபெறும்.

கலந்தாய்வின்பொழுது உடல் ஊனமுற்றவர்களுக்கு முதலிலும், அதனைத் தொடர்ந்து பெண்களுக்கும், பிறகு ஆண்களுக்கும் பணியிடங்களைத் தேர்ந்தெடுக்க வாய்ப்புகள் வழங்கப்படும். கீழே குறிப்பிட்டுள்ள 15 மாவட்டங்களில் ஏதேனும் ஒரு மாவட்டத்தைச் சேர்ந்தவர் அந்த மாவட்டத்திலுள்ள பணியிடத்தை தவிர்த்து பிற மாவட்டத்தில் உள்ள காலிப் பணியிடத்தை தேர்வு செய்ய விரும்பினால் அவர்கள் 10 மற்றும் 11ம் தேதிகளில் அவர்களுக்குரிய நாட்களில் திருச்சியில் நடைபெறும் கலந்தாய்வில் கலந்துகொள்ள வேண்டும்.

| கலந்தாய்வு நடைபெறும் நாள் | | 09.12.209 முற்பகல் 10.00 மணி |
|---|---|---|
| வரிசை எண் | தேர்ந்தெடுக்கப்பட்ட பணி நாடுநர்களின் இருப்பிட மாவட்டங்கள் | கலந்தாய்வு நடைபெறும் இடம் |
| 1 | கோவை | புனித காணிக்கை பெண்கள் மேல்நிலைப் பள்ளி, தலைமை தபால் நிலையம் அருகில், கோவை 641 001. |
| 2 | கடலூர் | கிருஷ்ணசாமி மெமோரியல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, நெல்லிக்குப்பம் மெயின் ரோடு, கடலூர் – 1. |
| 3 | தருமபுரி | அவ்வையார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, தருமபுரி. |
| 4 | ஈரோடு | அனைவருக்கும் கல்வி இயக்கக அலுவலகம், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி வளாகம், பன்னீர்செல்வம் பூங்கா அருகில், ஈரோடு. |

| | | |
|---|---|---|
| 5 | காஞ்சிபுரம் | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், காஞ்சிபுரம். |
| 6 | கிருஷ்ணகிரி | மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம், கிருஷ்ணகிரி |
| 7 | நாகப்பட்டினம் | மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலகம், நாகப்பட்டினம் |
| 8 | பெரம்பலூர் | தனலெட்சுமி சீனிவாசன் பொறியியற் கல்லூரி, பெரம்பலூர் |
| 9 | புதுக்கோட்டை | அரசு முன்மாதிரி மேல்நிலைப் பள்ளி, மச்சுவாடி, புதுக்கோட்டை. |
| 10 | சேலம் | சிறுமலர் துவக்கப் பள்ளி, நான்கு ரோடு, சேலம் |
| 11 | திருவள்ளூர் | புனித அந்தோணியார் நடுநிலைப் பள்ளி, ஆவடி. |
| 12 | திருவாரூர் | ஆர்.சி. பாத்திமா நடுநிலைப் பள்ளி, திருவாரூர். |
| 13 | திருவண்ணாமலை | டி.எம்., டவுன் துவக்கப் பள்ளி, திருவண்ணாமலை. |
| 14 | வேலூர் | அரசினர் முஸ்லீம் மேல்நிலைப் பள்ளி, வேலூர் –1. |
| 15 | விழுப்புரம் | முதன்மை கல்வி அலுவலர் அலுவலக கூட்ட அரங்கம், விழுப்புரம் (புதிய பேருந்து நிலையம் பின்புறம்) |

பணியிட ஒதுக்கீடு பெற்ற ஆசிரியர்களுக்கு அவர்கள் பணிபுரிய உள்ள மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களால் அந்தந்த மாவட்டத் தலைமையிடத்தில் 14.12.2009 அன்று பணிநியமன ஆணை வழங்கப்பட்டு, அன்றே பணியேற்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தூத்துக்குடி, திருவண்ணாமலை மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுநர்கள் கலந்தாய்வில் கலந்து கொள்ளலாம். அம்மாவட்டத்தைச் சார்ந்த நாடுநர்களுக்கு தேர்தல் விதிகள் காரணமாக ஆணைகள் வழங்கப்பட மாட்டாது. திருவண்ணாமலை மாவட்டத்தில் காலிப்பணியிடத்தை தேர்ந்தெடுக்கும் நாடுநர்களுக்கும் ஆணைகள் வழங்கப்படமாட்டாது. இவர்களுக்கு தேர்தல் முடிந்த பின்னர் பிறிதொரு நாளில் ஆணைகள் வழங்கப்படும். அத்தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை 9

தொடக்கக் கல்வி இயக்குநர்